# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 74 | 4 Pages | 16.10.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 74 | 4 பக்கங்கள் | 16.10.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## குஜராத்தில் 5,300 ஆண்டுகள் பழமையான கல்லறைகள் கண்டுபிடிப்பு



குஜராத், அக். 16

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில், குறைந்த மக்கள் தொகை கொண்ட கட்ச் பகுதியில் உள்ள கிராமம் கதீயா. இங்கு ஒரு மணல் குன்று ஆராய்ச்சியாளர்களின் கண்களில்பட்டது. இந்த மணல் குன்றினை தொல்லியல் அறிஞர்கள் அகழாய்வு செய்தனர்.

அப்போது அவர்கள் கண்ட காட்சி வியக்க செய்தது. மணல் குன்றின் உள்ளே பழங்கால குடியிருப்பு புதைந்து கிடப்பது போன்ற அடையாளங்கள் தென்பட்டன. இதை தொடர்ந்து கேரள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் அறிஞர் ராஜேஷ் தலைமையில் இந்திய, சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் இந்த 40 ஏக்கர் பரப்பளவிலான தளத்தில் 3 கட்டமாக அகழாய்வு செய்தனர். அப்போது அது 5,300 ஆண்டுகள் பழமையான கல்லறைகள் என தெரியவந்தது. உலகின் ஆரம்பகால நகர நாகரிகங்களில் ஒன்றான சிந்து சமூகத்தைச் சேர்ந்த 500 கல்லறைகள் அதில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்தக் கல்லறைகளில் சுமார் 200 கல்லறைகள் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டுள்ளன.

ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படும் இந்தச் சமூகம், சுமார் 5,300 ஆண்டுகளுக்கு முன்பு தற்போதைய வடமேற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் சுடு செங்கல் நகரங்களில் வாழ்ந்த எளிமையான விவசாயிகள் மற்றும் வணிகர்களால் நிறுவப்பட்டது இது சுமார் 3200 கி.மு. முதல் 2600 கி.மு. வரை சுமார் 500 ஆண்டுகள் பயன்பாட்டில் இருந்ததாக அவர்கள் நம்புகிறார்கள்.

இதுவரையிலான அகழ்வாராய்ச்சிகள் ஒரே ஒரு முழுமையான ஆண் மனித எலும்புக்கூட்டையும், மண்டை ஓடு துண்டுகள், எலும்புகள் மற்றும் பற்கள் உட்பட பகுதியளவில் பாதுகாக்கப்பட்ட எலும்பு க்கூட்டு எச்சங்களையும் மீட்டுள்ளனர்.மேலும் 100க்கும் மேற்பட்ட வளையல்கள் மற்றும் 27 ஓடுகளால் ஆன மணிகள். பீங்கான் பாத்திரங்கள், கிண்ணங்கள், தட்டுகள், பானைகள், சிறிய குடங்கள், குவளை, களிமண் பானைகள், தண்ணீர் கோப்பைகள், பாட்டில்கள் மற்றும் ஜாடிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த கல்லறைகளில் தனித்துவமான அம்சங்கள் உள்ளன, இதில் சில முட்டை வடிவமானவை. மற்றவை செவ்வக வடிவமானவை. குழந்தைகள் புதைக்கப்பட்ட சிறிய கல்லறைகள் உள்ளன. உடல்கள் மல்லாந்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அமில மண் காரணமாக பெரும்பாலான எலும்புகள் கரைந்துவிட்டன.

எகிப்து மற்றும் மெசபடோமியாவில் உள்ள மேல் தட்டு மக்களின் இறுதிச் சடங்குகளைப் போலல்லாமல், இவர்களின் இறுதிச் சடங்குகள் எளிமையானவை இருந்தன. இறந்தவர்களுடன் எந்த நகைகளும் ஆயுதங்களும் வைக்கப்படவில்லை.

இங்கு, பெரும்பாலான உடல்கள் துணியால் சுற்றி, செவ்வக வடிவிலான மரப் பெட்டிகளில் வைக்கப்பட்டன. கல்லறைக்குழி பெரும்பாலும் மண்பாண்ட பொருட்களால் நிரப்பப்பட்டிருக்கும், பின்னர் பெட்டி அதில் இறக்கப்படும் என்று விஸ்கான்சின் மடிசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிந்து சமவெளி நாகரிகத்தின் அறிஞரான ஜொனதன் மார்க் கெனோயர் கூறுகிறார். சிலர் வளையல்கள், மணிகள், அலங்காரப் பொருட்கள், செம்பால் செய்யப்பட்ட கண்ணாடியுடன் புதைக்கப்பட்டனர்.

முதியவர்கள், அவர்கள் பயன்படுத்திய உணவைப் பரிமாறுவதற்கும் சேமிப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட வெவ்வேறு வகையான பாத்திரங்களுடன் புதைக்கப்பட்டுள்ளனர்,

ஆனாலும் இந்த கல்லறைத் தளத்தில் பல மர்மங்கள் அடங்கி உள்ளன.

இதன் ரகசியங்கள் என்ன? இங்கு புதைக்கப்பட்டவர்கள் யார்? என்ற கேள்விகளும் எழுகின்றன. இந்தக் கல்லறைகளில் காணப்படும் லாபிஸ் லாசுலி என்னும் நீல நிற கற்கள் தூரத்தில் உள்ள ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தது என்று கருதப்படுகிறது. கல்லறைகள் நன்றாக வரையறுக்கப்பட்ட கல் சுவர்களுடன் கட்டப்பட்டிருப்பது, மக்கள் கற்களைக் கொண்டு கட்டுவதில் தேர்ச்சி பெற்றிருந்ததைக் குறிக்கிறது. இங்கு கிடைத்த மனித உடல் எச்சங்களை வேதியியல் ஆய்வுகள் மற்றும் டி.என்.ஏ. பரிசோதனைகள் செய்தால் இங்கு வாழ்ந்து இறந்த ஆரம்பகால மக்கள் பற்றி மேலும் அறிய உதவும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நவராத்திரி பிரமோற்சவ விழா



திருப்பதி, அக். 16

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நவராத்திரி பிரமோற்சவ விழா கோலாகலமாக தொடங்கியது. பிரம்மோற்சவ விழாவை முன்னிட்டு ஏழுமலையான் கோவிலில் அங்குரார் பனம் நடந்தது.

ஏழுமலையான் பெரிய சேஷ வாகனத்தில் 4 மாட வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். பிரமோற்சவ விழா நடைபெறும் 9 நாட்களும் விஐபி பிரேக் தரிசனம், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஒரு வயது குட்பட்ட குழந்தைகளுடன் வருபவர்களுக்கான சிறப்பு தரிசனங்கள், ஆர்ஜித சேவைகளை தேவஸ்தானம் ரத்து செய்து உள்ளது. இதனால் சாதாரண பக்தர்கள் அதிக அளவில் குறைந்த நேரத்தில் தரிசனம் செய்து வருகின்றனர்.

பிரமோற்சவத்தின் முக்கிய நாளான வருகிற 19ந் தேதி கருட சேவை நடைபெறுகிறது. கருட சேவையை காண நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான பக்தர்கள் குவிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் வருகிற 18ந் தேதி மாலை முதல் 20ந் தேதி காலை வரை மலைப்பாதைகளில் பைக்குகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளன. வருகிற 23ந் தேதி சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரியுடன் பிரம்மோற்சவ விழா நிறைவு பெறுகிறது.

திருப்பதியில் நேற்று 67, 785 பேர் தரிசனம் செய்தனர்.21, 284 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர்.ரூ 2.78 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# அண்ணா பல்கலைக்கழகத்தில் அப்துல் கலாம் முழு உருவச்சிலை: முதல்வர் திறந்து வைத்தார்

சென்னை, அக். 16

முன்னாள் ஜனாதிபதி ஏ.பி. ஜெ.அப்துல் கலாம் முழு உருவச்சிலை சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

சென்னையில் அப்துல் கலாமுக்கு சிலை வைக்க வேண்டும் என்று தமிழ்நாடு இளைஞர்கள் சங்கம் மற்றும் பல்வேறு அமைப்பினர் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்று தமிழக அரசு சார்பில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அப்துல் கலாமுக்கு சிலை அமைக்கப்படும் என்று தமிழக சட்டசபையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை மானியக் கோரிக்கையின்போது ஏற்கனவே அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அதன்படி அப்துல் கலாமுக்கு



சிறப்பு சேர்க்கும் வகையில் அவரது முழு உருவச்சிலை கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டது.

இந்த சிலை திறப்பு விழா அவரது பிறந்தநாளான இன்று காலை நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த அப்துல் கலாம் உருவப்படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அங்கு கூடியிருந்த மாணவமாணவிகள் உற்சாகமாக வரவேற்றனர். மாணவிகள் அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பொன்முடி, மா.சுப்பிரமணியன், எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, விருகை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, மேயர் பிரியா, துணைமேயர் மகேஷ்குமார், பொதுப் பணித்துறை செயலாளர் சந்திரமோகன், செய்தித் துறை செயலாளர் செல்வராஜ், செய்தித்துறை இயக்குனர் மோகன் மற்றும் இளைஞர்கள் சங்க மாநிலத் தலைவர் எம்.எம்.ஆர்.மதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பல்லடத்தில் அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

பல்லடம், அக். 16

பல்லடத்தில் அதிமுக., நகர நிர்வாகிகள் கூட்டம் நகரச் செயலாளர் ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் அதிமுக., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆணைக்கிணங்க அதிமுக., 52 ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு பல்லடம் நகரத்திலுள்ள 18 வார்டுகளில் கொடியேற்று விழா, மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது. இதில் நிர்வாகிகள் தமிழ்நாடு பழனிச்சாமி, தர்மராஜன், லட்சுமணன், வக்கீல் வெங்கடாஜலபதி, மரக்கடை கிருஷ்ணமூர்த்தி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## உணவு வணிகர்களுக்கு பதிவு சான்று வழங்கும் முகாம்

பல்லடம், அக். 16

பல்லடம் தாலுகாவுக்கு உட்பட்ட பல்லடம் நகராட்சி மற்றும் பல்லடம் வட்டார பகுதிகளில் உணவு வியாபாரம் செய்யக்கூடிய மளிகை கடை உரிமையாளர்கள், இறைச்சி விற்பனையாளர்கள், ஓட்டல் ,பேக்கரி, மெஸ், மற்றும் உணவு தயாரிப்பு கூடங்களின் உரிமையாளர்களுக்கு உணவு பாதுகாப்பு உரிமை மற்றும் பதிவு சான்று வழங்கும் முகாம் சிறப்பு நடைபெற்றது. பல்லடம் உணவு பாதுகாப்பு அலுவலர் கேசவராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், மொத்தம் 120 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில் மளிகை கடை, ஓட்டல், தள்ளுவண்டி உணவுக் கடை, போன்றவற்றின் உரிமையாளர்கள் கலந்து கொண்டு சான்றுகளை பெற்றுக் கொண்டனர்.





## மழை வேண்டி மக்கள் நூதன வழிபாடு

பல்லடம், அக். 16

பல்லடம் அருகே உள்ள பணிக்கம்பட்டி ஊராட்சி சின்னிய கவுண்டம்பாளையத்தில் போதிய மழை இல்லாததால் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. இதையடுத்து கிராம மக்கள் மழை வேண்டி வருண பகவானை கும்பிட்டு மழை சோறு எடுக்க முடிவு செய்தனர். இதன்படிகிராம மக்கள் வீடு, வீடாக சோறு யாசகம் பெற்று, ஊர் கோவில் முன்பு வைத்து பெண்கள் பொங்கல் வைத்துஅம்மனுக்கு படையலிட்டனர். பின்னர் அம்மனுக்கு படையலிடப்பட்ட பழைய சோறை ஊர்மக்கள் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்பட்டது.இதைத்தொடர்ந்து பழைய பொருட்கள்,பழைய அம்மிக்கல்,உரல் ஆகியவற்றை கோவில் முன்பு வைத்து மழை வேண்டி ஒப்பாரி பாட்டு பாடி, கும்மியடித்து அனைத்து பழைய பொருட்களையும் ஊர் எல்லையில் கொண்டு சென்று வீசினர்.

கிராம மக்களின் இந்த நூதன வழிபாட்டை இன்றைய இளைய தலைமுறையினர் ஆச்சரியத்துடன் அதிசயமாக பார்த்து ரசித்தனர்.

## காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம்

பல்லடம், அக். 16

பல்லடம் உட்கோட்ட காவல்துறைக்கு உட்பட்ட பல்லடம்,மங்கலம், காமநாயக்கன்பாளையம், அவினாசி பாளையம், ஆகிய போலீஸ் நிலையங்களில், இடப் பிரச்சனை, பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை, உள்ளிட்ட நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள புகார்களுக்கு தீர்வு காணும் வகையில், திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட் சாமிநாதன் உத்தரவின் பேரில், பல்லடம் துணை போலீஸ் சூப்பிரண்டு சவுமியா மேற்பார்வையில் பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம் பல்லடத்திலுள்ள தனியார்



திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதில் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் உள்பட சுமார் 100க்கும் மேற்பட்ட வழக்குகள் விசாரணை செய்யப்பட்டது. இந்த முகாமில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பல்லடம் ம ணி க ண் டன் , குற்றப்பிரிவு சரஸ்வதி, மங்கலம் கோபாலகிருஷ்ணன், அவிநாசிபாளையம் விஜயா, மற்றும் போலீசார் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பல்லடம் சமூக ஆர்வலர்கள் கொடுத்த மனுவில் , பல்லடம் நால்ரோடு சிக்னல், பஸ் நிலையம் உள்ளிட்ட இடங்களில் சிலர் கார் கண்ணாடிகளை தட்டி பிச்சை கேட்பதாகவும், கொடுக்க மறுத்தால் சாபம் இடுவதாகவும், இதனால் வாகன ஓட்டிகளுக்கு மன உளைச்சல் ஏற்படுவதாகவும், மேலும் வட மாநிலங்களைச் சேர்ந்த சிலர் கார் கண்ணாடிகளில் சோப்பு தண்ணீரை பீச்சி அடித்து,கண்ணாடியை சுத்தம் செய்ததாக கூறி வாகன ஓட்டிகளிடம் வற்புறுத்தி பணம் கேட்பதாகவும், எனவே போலீசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டுள்ளது.

## வாரச்சந்தையில் தக்காளி ஒரு கிலோ ரூ.20க்கு விற்பனை

வெள்ளகோவில், அக். 16

வெள்ளகோவிலில் ஞாயிறு தோறும் வாரச்சந்தை செயல்படுகிறது, வெள்ளகோவில் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் கிடைக்கும் காய்கறிகள் மற்றும் பயிர் வகைகளை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். இதை பொதுமக்கள் மற்றும் நூல் மில்களில் தங்கி வேலை செய்யும் ஊழியர்கள் தங்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவையான காய்கறி மற்றும் மளிகை சாமான்களை வாங்கிச்செல்வார்கள். இன்று வார சந்தையில் தக்காளி ஒரு கிலோ ரூ.20, கத்தரிக்காய் ரூ.60, பீர்க்கங்காய் ரூ.60. பெரிய வெங்காயம் ரூ.30 , சின்ன வெங்காயம் ரூ. 100. உருளைக்கிழங்கு ரூ.30, பீட்ரூட் ரூ.40, புடலை காய் ரூ.40, முட்டை கோஸ் ரூ.40, பீன்ஸ் ரூ.100, கேரட் ரூ.60, பாவற்காய் ரூ.60,வெண்டைக்காய் ரூ.60, இஞ்சி ரூ.150, அவரைக்காய் ரூ.80, நேரோ காய் ரூ. 40, கோவக்காய் ரூ.40, முள்ளங்கி ரூ. 40, பச்சை மிளகாய் ரூ.55,சுரக்காய் ரூ.10க்கும் விற்பனை செய்யப்பட்டது.இத்தகவலை வாரச்சந்தை வியாபாரி குமார் தெரிவித்தார்.

# தஞ்சை ரேணுகாதேவி அம்மன் கோவிலில் நவராத்திரி வழிபாடு



தஞ்சாவூர், அக். 16

தஞ்சாவூர் தெற்கு வீதி அருகில் எல்லையம்மன் என்கிற ரேணுகாதேவி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

தஞ்சாவூரில் ரேணுகா தேவி அம்மன் என உள்ள ஒரே கோவிலாகும்.

நவராத்திரி விழாவை முன்னிட்டு மூலவர் ரேணுகாதேவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் நடைபெற்றது.

இதில் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இக்கோவிலில் இன்று முதல் வரும் 24ம்தேதி வரை மாலையில் வெகுவிமரிசையாக ரேணுகாதேவி அம்மனுக்கு நவராத்திரி சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

மேலும் இசைக்கச்சேரி நடக்கிறது.

# சிறப்பு மக்கள் நீதிமன்றம் மூலம் 971 வழக்குகளில் ரூ.3.83 கோடிக்கு தீர்வு

கிருஷ்ணகிரி, அக். 16

கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமனற வளாகத்தில் தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்ப ணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படி, கிருஷ்ணகிரி மாவட்ட சட்டப்ப ணிகள் ஆணைக்கு ழுவின் தலைவரும்,முதன்மைமாவட்ட நீதிபதி சுமதிசாய் பிரியா முன்னி லையில், கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் சிறப்பு மக்கள் நீதிமன்றம் நடந்தது. இந்நிகழ்ச்சியின் போது அவர் பேசுகையில், இந்த வருடத்தில் இது 5வது சிறப்பு மக்கள் நீதிமன்றம் ஆகும்.

வழக்கா டிகள் நிலுவையில் உள்ள தங்கள் வழக்குகளை சமரசமாக பேசி தீர்வு காணலாம். ஏற்கனவேகிருஷ்ணகிரிமாவட்டம் முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் வங்கிகள், பைனான்ஸ் நிறுவனங்களின் முன் சமரசங்களின் வாயிலாக 99



வழக்குகளில் தீர்வு காணப்பட்டு, ரூ.1 கோடியே 11 லட்சத்து 48 ஆயிரத்து 619 வசூல் ஆகியுள்ளது.

எனவே, இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்தி, நிலுவையில் உள்ள வழக்குகளை முடித்துக்கொள்ள முன்வர வேண்டும். இது குறித்து மற்றவர்க ளுக்கும் விழிப்பு ணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்ச ம்பள்ளி, ஓசூர் மற்றும் தேன்கனிக் கோட்டை ஆகிய நீதிமன்ற ங்களில் நிலுவையில் உள்ள மோட்டார் வாகன விபத்து வழக்குகள், குடும்ப நல வழக்குகள், வங்கி கடன் வழக்குகள், காசோலை வழக்குகள், நிதி நிறுவன வழக்குகள், பாகப்பிரிவினை வழக்குகள் மற்றும் முன் வழக்குகள் ஆகியவை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் 971 வழக்குகளில் ரூ.3 கோடியே 83 லட்சத்து 28 ஆயிரத்து 271க்கு தீர்வு காணப்பட்டது.

மேலும், முதன்மை மாவட்ட நீதிபதி, குடும்ப நல வழக்கில் இணைந்த ஜோடிக்கு இனிப்பு மற்றும் மரக்கன்று வழங்கியும், பாகப்பிரிவினை வழக்கில் இணைந்த குடும்பத்திற்கு இனிப்புகள் வழங்கியும் வாழ்த்தினார்.

இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் குடும்ப நல நீதிபதி நாகராஜன், மாவட்ட அமர்வு நீதிபதி சுதா,தலைமைகுற்றவியல் நீதித்துறை நடுவர் பிரியா, முதன்மை சார்பு நீதிபதி மோகன்ராஜ், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் மற்றும் சார்பு நீதிபதி ஜெனிபர், நீதித்துறை நடுவர் எண்.1 கார்த்திக் ஆசாத், வழக்கறிஞர் சங்க துணைத் தலைவர் ராமசந்திரன், செயலாளர் சத்தியநாராயணன் மற்றும் வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் செய்யப்பட்டிருந்தது.

# காங்கயத்தில் மாயமான மூதாட்டி பிணமாக மீட்பு

வெள்ளகோவில், அக். 16

காங்கயம், பங்களாபுதூர் ரோடு பகுதியைச் சேர்ந்த ஜெயலட்சுமி (வயது 73) என்ற மூதாட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காணாமல் போனதாக காங்கயம் காவல் நிலையத்தில் மூதாட்டியின் உறவினர்கள் புகார் கொடுத்துள்ளனர், புகாரின் பேரில் காங்கயம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் வெள்ள கோவில் அருகே உள்ள பொன்பரப்பி என்ற இடத்தில் பி. ஏ. பி., கிளை வாய்க்காலில் மூதாட்டியின் உடல் கிடந்துள்ளது.தகவல் அறிந்த வெள்ளகோவில் போலீசார் உடலை கைப்பற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மருத்துவ மாணவி தற்கொலை விவகாரம்: சிபிசிஐடி போலீசார் சென்னை, தூத்துக்குடி விரைந்தனர்

திருவட்டார், அக். 16

குலசேகரம் மூகாம்பிகா மருத்துவ கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வந்தவர் சுகிர்தா (வயது 27). தூத்துக்குடி வி.இ.ரோடு பகுதியை சேர்ந்த இவர் கல்லூரியில் உள்ள விடுதியில் தங்கி படித்து வந்தார். சம்பவத்தன்று விடுதியில் இருந்த சுகிர்தா விஷ ஊசி போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி குலசேகரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினார்கள்.

சுகிர்தா எழுதி வைத்திருந்த கடிதத்தையும் போலீசார் கைப்பற்றினார்கள். அந்த கடிதத்தில் தன்னுடைய தற்கொலைக்கு பேராசிரியர் டாக்டர் பரமசிவம் மற்றும் பயிற்சி டாக்டர்கள் ப்ரீத்தி, ஹரீஸ் காரணம் என்று கூறியிருந்தார். அதில் டாக்டர் பரமசிவம் பாலியல்ரீதியாகவும் ப்ரீத்தி, ஹரீஸ் இருவரும் ம ன த ள வி லு ம் துன்புறுத்தியதாக கூறியிருந்தார்.

கடிதத்தை கைப்பற்றிய போலீசார் பேராசிரியர் பரமசிவம் உட்பட 3 பேர் மீதும் தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையில் சுகிர்தாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு பிறகு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. பேராசிரியர் பரமசிவம், ஹரீஸ், ப்ரீத்தி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்ட பிறகும் அவர்கள் கைது செய்யபடவில்லை.

இதற்கு கண்டனம் தெரிவித்த அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு மாணவமாணவிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் டாக்டர் பரமசிவத்தை குலசேகரம் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி நாகர்கோவில் ஜெயிலில் அடைத்தனர். இந்த நிலையில் இந்த வழக்கை சி.பி. சி.ஐ.டி.க்கு மாற்றி தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது. இதனை தொடர்ந்து சி.பி.சி.ஐ.டி. டி.எஸ்.பி. ராஜ்குமார், இன்ஸ்பெக்டர் பார்வதி தலைமையிலான போலீசார் இது தொடர்பாக விசாரணையை தொடங்கினார்கள். நேற்று மூகாம்பிகா கல்லூரிக்கு சென்ற அவர்கள் மாணவி தங்கி இருந்த அறையை பார்வையிட்டனர். பின்னர் அவரது செல்போன் மற்றும் லேப்டாப் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணைமேற்கொண்டனர். கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவமாணவிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது.

மதியம் தொடங்கிய விசாரணை இரவு வரை நீடித்தது. இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்க சி.பி.சி.ஐ.டி. போலீசார் 2 தனிப்படை அமைத்துள்ளனர். தனிப்படை போலீசார் சென்னை மற்றும் தூத்துக்குடிக்கு விரைந்து ள்ளனர்.

தூத்துக்குடியில் உள்ள சுகிர்தாவின் தந்தை மற்றும் தாயாரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. சென்னைக்கு விரைந்துள்ள தனிப்படையினர் பயிற்சி டாக்டர் ஹரீசிடம் விசாரணை மேற்கொள்ள உள்ளனர். மேலும் சிறையில் அடைக்கப்பட்ட பேராசிரியர் பரமசிவத்தை காவலில்எடுத்துவிசாரிக்கவும் சி.பி.சி.ஐ.டி. போலீசார் முடிவு செய்துள்ளனர்.

# பின்னலாடை தொழிலாளர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப கூடுதல் போனஸ் வழங்க வேண்டும்: அனைத்து பனியன் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தல்

திருப்பூர், அக். 16

திருப்பூர் சிஐடியூ., பனியன் தொழிற்சங்க அலுவலகத்தில் அனைத்து தொழிற்சங்கநிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு சிஐடியூ., பனியன் சங்க பொதுச் செயலாளர் ஜி.சம்பத் தலைமை வகித்தார். கூட்டத்தில், திருப்பூர் பின்னலாடைத் தொழிலாளர்களின் போனஸ் கோரிக்கைகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டன.

அதில், தற்போது கடுமையாக உயர்ந்து இருக்கும் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அனைத்து தொழிலாளர்களுக்கும் கடந்த ஆண்டை காட்டிலும் கூடுதல் போனஸ் தொகையை அந்தந்த நிறுவன உரிமையாளர்கள் தீபாவளி பண்டிகைக்கு 15 நாள்களுக்கு முன்பாக வழங்க வேண்டும். தொழிலாளர்களின் போனஸ் கோரிக்கையை வலியுறுத்தி அக்டோபர் 17ந்தேதி முதல் 26ந்தேதி வரை திருப்பூரின் பல்வேறு பகுதிகளில் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் தெருமுனைப் பிரசாரக் கூட்டம் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.



கூட்டத்தில், ஏஐடியூசி பனியன் சங்க பொதுச் செயலாளர் என்.சேகர், எல்.பி.எப். பனியன் சங்கத் தலைவர் ஜி.பாலசுப்பிரமணியன், ஐ.என்.டி.யூ.சி. செயலாளர் அ.சிவசாமி, எம்.எல்.எஃப். பனியன் சங்க செயலாளர் மனோகரன், எச்.எம்.எஸ். செயலாளர் ஆர்.முத்துசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பழைய ரோட்டின் மேல் புதிய ரோடு அமைக்கும் பணிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

தர்மபுரி, அக். 16

தருமபுரி திருவண்ணாமலை இடையே ரூ.410 கோடி மதிப்பீட்டில் 4 வழிச்சாலை அமைக்கப்படுகிறது. இதற்கான பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ரூ.313.50 கோடி மதிப்பீட்டில்தர்மபுரிஅரூர்(மொரப்பூர் வழி) சாலை வரை இரு வழிப்பாதையிலிருந்து 4 வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், ரூ.96.50 கோடியில் அரூர் வழி தாணிப்பாடிதிருவண்ணாமலை சாலை வரை இருவழி பாதையில் இருந்து 4 வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



தருமபுரி திருவண்ணாமலை 113 கிலோ மீட்டர் தூரம் ஆகும். இதில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 73 கிலோ மீட்டர் தூரம் இந்த சாலை அமைக்கப்படுகிறது.

இதற்காக ஏற்கெனவே தருமபுரி, கோபிநாதம்பட்டி, செம்மண்அள்ளி, மொரப்பூர் பகுதிகளில் மரங்கள் அகற்றப்பட்டு, பணிகள் நடந்து வருகிறது. இதில் தற்போது சாலையின் அகலம் 7 மீட்டராக உள்ளது. இது 16.20 மீட்டர் அகலமுள்ள 4 வழிச்சாலையாக மாற்றப்பட்டு. இச்சாலையில் தருமபுரிஅரூர் வழி மொரப்பூர் சாலையில் 70 சிறுபாலங்கள் கட்டப்பட்டு சாலை அமைக்கும் முடி ஒரு முடிவு பெறும் நிலையில் உள்ளது.

நான்கு வழி சாலைகளை தரமான சாலையாக அமைக்க தமிழ்நாடு அரசு மூலமாக ஒப்பந்தங்கள் விடப்பட்டு எட்டு ஒப்பந்ததாரர்கள் நான்கு வழிச் சாலை அமைக்கும் பணி ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் ஒப்பந்ததாரர்கள் பழைய தார்சாலையை அகற்றாமல் பழைய தார் சாலையின் மீது தார் கலவை கொட்டி சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இப்படி சாலை அமைப்பதால் வரும் காலங்களில் அந்த சாலையை தரமான சாலையாக இல்லாமல் பழைய சாலையாக மாறும் நிலை ஏற்படும் என்று வாகன ஓட்டிகள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்த நிலையில் அரூர் அருகே உள்ள சேவா கிராம பகுதியில் பழைய சாலையை அகற்றாமல் பழைய சாலையின் மீது புதிய தார் சாலை அமைக்கும் பணியை ஈடுபட்டிருந்தனர்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் பொது மக்கள் பழைய தார் சாலையை அகற்றிவிட்டு புதிய தார் சாலையை அமைக்க வலியுறுத்தி சுமார் 50க்கும் மேற்பட்டோர் சாலை அமைக்கும் பணியை தடுத்து நிறுத்தினர்.

தகவல் அறிந்து வந்த அரூர் வட்டாட்சியர் பெருமாள் வி.சி.க., கட்சினரிடையே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று வட்டாச்சியர் உறுதியளித்ததை அடுத்துஅவர்கள்கலைந்து சென்றனர். பழைய ரோட்டின் மேல புதிய ரோடு போடும் பணி நிறுத்தப்பட்டது.

# கடந்த காலங்களில் போட்டித் தேர்வுகளில் முறைகேடுகள் நடந்ததா என்று விசாரிக்க வேண்டும்: ராமதாஸ்

சென்னை,அக். 16

நவராத்திரி விழா தொடங்கியதையொட்டி தமிழ்நாடு தனியார் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஏ.என்.எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கொலுக்களுக்கு அழைத்து செல்ல வேண்டும். கொலுக்களில் ஆடல், பாடல் மூலம் தங்கள்திறமைகளை வளர்த்து கொள்ளவும், இறை நம்பிக்கையுடன் நல்ல பண்புகள் வளரவும் பாரம்பரியத்தை அறிந்துக் கொள்ளவும் குழந்தைகளுக்கு வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

# பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்து பயிற்சி



திருவாரூர், அக். 16

நீடாமங்கலத்தில் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பரண் மேல் ஆடு வளர்ப்பு பற்றிய பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு தஞ்சையில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய வளாகத்த லைவர் டாக்டர். ஜெகதீசன்தலைமைதாங்கி நல்ல ஆட்டின் இனங்கள், அவற்றை தேர்வு செய்யும் முறை, இனப்பெருக்க முறைகள் குறித்து பேசினார்.

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் ராமசாமி முன்னிலை வகித்தார்.

பயிற்சிக்கான ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சபாபதி பேசுகையில், ஆடு வளர்ப்பதற்கான கொட்டகை முறைகள், பசுந்தீவன உற்பத்தி முறைகள், கலப்பு தீவனம் தயாரித்தல் மற்றும் நல்ல ஆடுகளை தேர்வு செய்தல் குறித்து விளக்கி கூறினார்.

நீடாமங்கலம் கால்நடை உதவி டாக்டர் பவித்ரா ஆடுகளை தாக்கும் நோய்கள்மற்றும் அவற்றை தடுக்கும் முறை குறித்து விளக்கி கூறினார்.

முன்னதாக வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு பற்றிய கண்காட்சியை டாக்டர் ஜெகதீசன் டாக்டர் ஜெகதீசன் திறந்து வைத்தார்.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# பள்ளபாளையம் வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில் பயனாளிகளுக்கு கடன் உதவி: அமைச்சர் வழங்கினார்

உடுமலை, அக். 16

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பள்ளபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுசங்கம்வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ.47 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூட்டுறவு எண்ணெய் ஆலையை கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் தமிழக செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்து, 60பயனாளிகளுக்கு ரூ.48.13 லட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார்.




பின்னர் அவர் பேசியதாவது:

பள்ளபாளையம் கூட்டுறவு சங்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஒரு நீண்ட பாரம்பரியத்திற்கு உரியது. விவசாய பெருங்குடி மக்களுக்கு பெரிதும் உதவிகரமாக சிறப்பாக செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியது. மேலும் எண்ணெய் ஆலை மட்டுமில்லாமல் தொழிற்சாலை நடத்தக்கூடிய அளவில் வளர வேண்டும் என எனது வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

விவசாயத்தை மேற்கொள்ளும் அளவுக்கு இந்த சங்கம் வளர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.அரசு நடத்தக்கூடிய சங்கத்தின் மூலமாக பொதுமக்களிடம் இருந்து வரக்கூடிய கடலைபருப்புகளை கொள்முதல் செய்து அரைத்து சுத்தமான எண்ணெய் எடுத்துவெளிப்படுத்தி மக்களை கவரக்கூடிய வகையில் வளர்ந்து இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு கடன் உதவிகள் வழங்கும் வகையிலும் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தின் கீழ் 509 நபர்களுக்கு ரூ.548.87 லட்சம் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.தமிழக அரசின்நகைக்கடன்தள்ளுபடி திட்டத்தின் கீழ் 394 நபர்களுக்கு ரூ.190.56 லட்சம் நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி திட்டத்தின்கீழ் 8 குழுக்களுக்கு 80 நபர்களுக்கு ரூ.4.68 லட்சம் மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து, 24 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளையும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.50,000 மதிப்பீட்டில் கடனுதவியையும், 29 நபர்களுக்கு ரூ.34.13 லட்சம் மதிப்பீட்டில் கே.சி.சி பயிர் கடனுதவிகளையும், 6நபர்களுக்கு ரூ.5.50 லட்சம் மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும் என மொத்தம் 60 பயனாளிகளுக்கு ரூ.48.13 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை அமைச்சர் வழங்கினார்.

விழாவில் துணை பதிவாளர் (கூட்டுறவுத்துறை) கந்தசாமி, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக்குழுத் தலைவர் இல.பத்மநாபன், கூட்டுறவு சார்பதிவாளர் சித்ரா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



# நெல்லை உலர வைக்கும் பணியில் விவசாயிகள்

நாகப்பட்டினம், அக். 16

நாகை மாவட்டத்தில் நடப்பாண்டு காலத்தோடு திறந்துவிடப்பட்ட காவிரி நீர் காரணமாக மகிழ்ச்சியோடு சாகுபடி தொடங்கிய விவசாயிகளுக்கு அடுத்த சில நாட்களிலேயே துயரம் காத்திருந்தது.

மேட்டூரில் திறந்து விடப்பட்ட காவிரி நீர் கடைமடை வரை சீராக வந்து சேராத காரணத்தால் குறுவை சாகுபடி பெருமளவு பாதிக்க தொடங்கியது.

தண்ணீர் கேட்டு பல்வேறு கட்ட போராட்டங்கள் விவசாயிகள் நடத்திய நிலையில் பயிர்களை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்து அவர்கள் டீசல் இன்ஜின் வாடகைக்கு எடுத்து கூடுதல் செலவு செய்து குளம், குட்டை, வாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மோட்டார் மூலம் தண்ணீர் இறைத்து குறுவைப் பயிர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்ட அவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 35 மூட்டை வரை கிடைக்க வேண்டிய நிலையில் 10 முதல் 15 முட்டை வரையே தண்ணீர் இல்லாத காரணத்தால் அறுவடையில் கிடைத்ததாக கவலை தெரிவிக்கும் விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை சாலையில் கொட்டி காய வைக்கும் பணியில் கடந்த சில நாட்களாக ஈடுபட்டு வந்தனர்.

ஒரத்தூர், அகர ஒரத்தூர், வேர்க்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தங்களுக்கு காலத்தோடு நேரடி நெல் கொள்முதல் திறக்க வேண்டும் என கடந்த 10 கோரிக்கை விடுத்த நிலையில் தற்போது பெய்த கன மழை காரணமாக ஒரத்தூர், வேர்க்குடி, அகர ஒரத்தூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளின் ஆயிரம் மூட்டை குருவை நெல்கள் நனைந்து பாதிப்பு ஏற்பட்டதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நி லை ய த் தை திறப்பதோடு ஈரப்பதத்துடன் குருவை நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜேடர்பாளையம் அருகே 2000 வாழை, 200 பாக்கு மரங்கள் வெட்டி சாய்ப்பு: பதட்டம் போலீஸ் குவிப்பு

பரமத்திவேலூர், அக்.16

நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையம் பகுதியில் கடந்த மார்ச் மாதம் முதல் தொடர்ந்து வீடுகள், வாகனங்களுக்கு தீ வைப்பு, வடமாநில தொழிலாளர்கள் மீது தாக்குதல், விவசாய பயிர்கள் வெட்டி சாய்க்கப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

இதனை தடுக்கவும் கு ற் ற வா ளி க ளை பிடிக்கவும் அப்பகுதியில் 1000க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் துப்பாக்கி ஏந்திய போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே மீண்டும் ஜேடர்பாளையம் அருகே உள்ள கொத்தமங்கலம் பகுதியில் தர்மலிங்கம்



(வயது 56), நல்லசிவம் (62), புலவர் சுப்பிரமணி, வக்கீல் சுப்பிரமணி (68) ஆகியோரது தோட்டத்தில் இருந்த சுமார் 2000க்கும் மேற்பட்ட வாழை மரங்களை மர்ம நபர்கள் நேற்று நள்ளிரவு வெட்டி சாய்த்தனர்.

மேலும் வக்கீல் சுப்பிரமணி என்பவரது தோட்டத்தில் இருந்த 200 பாக்கு மரங்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட வாழை மரங்களையும் மர்ம நபர்கள் வெட்டி சாய்த்தனர். இதனால் அந்த பகுதிகளில் பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் அறிந்த நாமக்கல் மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு ராஜூ தலைமையிலான போலீசார் வாழை மரங்கள் மற்றும் பாக்கு மரங்கள் வெட்டப்பட்ட தோட்டத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பாக்கு மரம் மற்றும் வாழை மரங்கள் வெட்டப்பட்ட பகுதிகளில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

வாழை மரங்கள் மற்றும் பாக்கு மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் உள்ள மக்களிடையே பெரும் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தி உள்ளது. ஜேடர்பாளையம் பகுதியில் தொடரும் இச்சம்பவத்திற்கு போலீசார் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாமளாபுரம் பேரூராட்சியில் காய்ச்சல் தடுப்பு சிறப்பு முகாம்

மங்கலம், அக். 16

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் பொது சுகாதாரம் மற்றும் காய்ச்சல் தடுப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமானது பல்லடம் வட்டார மருத்துவ அலுவலர் சுடர்விழி தலைமையில் நடைபெற்றது.

இந்த முகாமிற்கு சாமளாபுரம் பேரூராட்சி மன்றத்தலைவர் விநாயகாபழனிச்சாமி முன்னிலை வகித்தார். மேலும் இந்த முகாமில் சாமளாபுரம் பேரூராட்சி செயல்அலுவலர் ஆனந்தகுமார், சாமளாபுரம் பேரூராட்சி பணியாளர்கள் உள்பட பலர்



கலந்து கொண்டனர். இந்த முகாமில் டாக்டர்.காவ்யாஸ்ரீ மற்றும் மருத்துவகுழுவினர் சிகிச்சை அளித்தனர். முகாமில் சாமளாபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் பங்கேற்றனர். இலவசமாக மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது.

# ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

ராமேசுவரம், அக். 16

ராமேசுவரம் மற்றும் மண்டபத்தை சேர்ந்த 27 மீனவர்களுடன் 5 படகுகளை இலங்கை கடற்படையினர் எல்லைதாண்டி வந்ததாககூறி சிறைபிடித்து சென்றனர். இந்த சம்பவம் ரா மே ம சு வ ர ம் மீனவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் சிறைபிடிப்பு தொடர்பாக இன்று ராமேசுவரத்தில் மீனவர் சங்கங்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இ தி ல் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள், படகுகளை உடனே விடுவிக்க வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் உடனடி



நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனை வலியுறுத்தி இன்று முதல் ரா மே ம சு வ ர த் தி ல் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்யப்பட்டது. மேலும் வருகிற 18ந் தேதி பாம்பனில் சாலை மறியல் நடத்தப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# கொடிவேரி அணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை

கோபி, அக். 16

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே கொடிவேரி தடுப்பணையில் கொட்டும் த ண் ணீ ரி ல் குளிப்பதற்கும், ரசிப்பதற்கும் தினமும் ஏராளமான சற்றுலா பயணிகள் தடுப்பணைக்கு வந்து செல்கிறார்கள்.

மேலும் விடுமுறை மற்றும் விழா நாட்களில் ஈரோடு, கோபி செட்டிபாளையம், சத்தியமங்கலம் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், சேலம், நாமக்கல், திருப்பூர், கோவை, கரூர் உள்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் கொடிவேரிக்கு தங்கள் குடும்பத்துடன் வந்து அங்கு ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் குளித்து மகிழ்ந்து செல்கிறார்கள்.

இதனால் விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் கொரிவேரியில் மக்கள் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.



இந்த நிலையில் சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம், நம்பியூர் கொடிவேரி மற்றும் சுற்றுவாட்டார பகுதிகளில் இடி, மின்னலுடன் பலத்த மழை கொட்டி தீர்த்தது.

இதனால் கோபி, நம்பியூர் பகுதிகளில் பவானி ஆற்றில் தண்ணீர் அதிகளவில் செல்கிறது.

இதே போல் கொடிவேரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் நேற்று இரவு முதல் விடிய விடிய மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால் கொடிவேரி தடுப்பணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கொடிவேரியில் 1200 கன அடி தண்ணீர் செல்கிறது.

இதனால் கொடிவேரி தடுப்பணையில் இரு கரைகளையும் தொட்டப்படி தண்ணீர் பெருக்கெடுத்து ஆர்ப்பரித்து செல்கிறது. இதையொட்டி கொடிவேரி தடுப்பணையில் சுற்றுலா பயணிகள் இன்று குளிக்க தடை விதிக்கப்பட்டு உள்ளது. நீர் பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால் கொடிவேரி தடுப்பணையில் தண்ணீர் அதிகளவு செல்கிறது.

எனவே சுற்றுலா பயணிகள் தடுப்பணையில் குளிக்க தடை விதிக்கப்படுகிறது. அணையில் தண்ணீர் அளவு குறைவும் வரை பொதுமக்களுக்கு அனுமதி இல்லை. நீர் வரத்து குறைந்த பின் வழக்கம் போல் அனுமதி வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையொட்டி கொடிவேரி தடுப்பணைக்கு செல்லும் நுழைவு வாயில் அடைக்கப்பட்டு தடை என அறிவிக்கப்பட்டு இருந்ததது.

இந்தநிலையில் ஞாயிற்றுக்கிழமை என்பதால் இன்று காலை வழக்கம் போல் சுற்றுலா பயணிகள் பலர் வேன், கார் மற்றும் இரு சக்கர வாகனங்களில் கொடிவேரி தடுப்பணைக்கு வந்து இருந்தனர். ஆனால் உள்ளே செல்லவும், குளிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டு இருந்ததால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இதையொட்டி அவர்கள் அந்த பகுதியில் இயற்கை அழகை ரசித்து விட்டு அணையில் கு ளி க் க முடியவில்லையே என ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# தசரா திருவிழாவையொட்டி பாளையில் அணிவகுத்த 11 அம்மன் சப்பரங்கள்

நெல்லை, அக். 16

குலசை முத்தாரம்மன் கோவிலுக்கு அடுத்தப்படியாக நெல்லை மாநகர் பாளையில் தசரா திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்படும்.

இந்த விழாவில் 12 அம்மன் சப்பரங்கள் அணிவகுக்க சூரசம்ஹாரம் நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டு தசரா விழாவின் தொடக்கமாக பாளை ஆயிரத்தம்மன் கோவிலில் நேற்று காலை கொடியேற்றம் நடந்தது. தொடர்ந்து காப்பு கட்டுதல், அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இரவில் பாளையில் அமைந்துள்ள ஸ்ரீ ஆயிரத்தம்மன், ஸ்ரீ பேராத்துசெல்வி, ஸ்ரீ தூத்துவாரி முத்தாரம்மன், உச்சினிமாகாளி அம்மன் என 11 கோவில்களில் உற்சவர் அம்மன் ரிஷப வாகனத்தில் சிறப்பு அலங்காரத்தில் வந்தார்.

ஒரு கோவிலில் திருப்பணிகள் நடைபெற்று வருவதால் அந்த கோவில் சப்பரம் மட்டும் வரவில்லை. மேலும் வண்ண விளக்குகள் ஜொலிக்க மேளதாளங்கள் முழங்க, ஸ்ரீ ஆயிரத்தம்மன் தலைமையில் 8 ரதவீதிகளிலும் வீதி உலா வந்தனர். சப்பரத்திற்கு முன்பு கொடி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

தொடர்ந்து இன்று காலையில் ராஜகோபால சுவாமி கோவில் முன்பு 11 சப்பரங்கள் அணிவகுத்து



நின்றன. இதனை திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர். பின்னர் அனைத்து சப்பரங்களுக்கும் ஆரத்தி நடைபெற்று தங்கள் கோவில்களுக்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டது.

இன்றுமுதல் 11 கோவில்களிலும் அடுத்த 9 நாட்களும் ஒவ்வொரு அலங்காரத்தில் அம்பாள் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் வைபவம் நடக்கிறது. அதனை தொடர்ந்து அம்மன் கொலுவில் வீற்றிருக்கும் வைபவமும் நடக்கிறது. வருகிற விஜயதசமி அன்று 12 சப்பரங்களில் அம்பாள் வீதி உலாவும், அதனை தொடர்ந்து சூரசம்காரமும் நடைபெறுகிறது.

இன்று 11 கோவில்களில் இருந்தும் எவ்வித பிரச்சினையும் இன்று சப்பரங்கள் எடுத்து வரப்பட்டது. இதற்காக மாநகர துணை போலீஸ் கமிஷனர்கள் ஆதர்ஷ் பசேரா, சரவணக்குமார் ஆகியோர் தலைமையில் போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

# கடன் பெற்றுத்தருவதாக கூறி மகளிர் சுய உதவி குழுக்களிடம் ரூ.43 லட்சம் மோசடி அக்காதம்பி உள்பட 3பேர் கைது

காங்கயம், அக். 16

திருப்பூர் மாவட்டம், காங்கயம், அவிநாசியில் தனியார் நிதி நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் தனிநபர்கள் தொழில் தொடங்க கடன் பெற்றுத் தருவதாக விளம்பரம் செய்யப்பட்டது.

இதனை நம்பி ஏராளமானவர்கள் செலுத்திய பணத்தைப் பெற்றுக் கொண்டு தலைமறைவானது தொடர்பாக பொது மக்கள் அளித்த புகாரின்பேரில், திருப்பூர் மாவட்ட குற்றப் பிரிவில் அந்த நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் நிர்மல்குமார், பொது மேலாளர் தேவிகா, கோபி ஆகியோர் மீது அக்டோபர் 11ந் தேதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.சாமிநாதன் உத்தரவின்பேரில் 5 தனிப் படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. இதில், அந்த நிறுவனத்தின் காங்



கயம் கிளையில் மகளிர் குழு ஒன்றுக்கு தலா 10 பேர் வீதம் 55 குழுக்கள் மூலம் 550 பெண்கள் தலா ரூ.1,341 என மொத்தம் ரூ.7, 37, 550ஐ செலுத்தியுள்ளனர்.

அதேபோல, தனிநபர் கடனுக்காக 261 பேர் தலா ரூ.1,000 வீதம் ரூ.2.61 லட்சம் செலுத்தியுள்ளனர். இதில், 86 பேர் தனிநபர் கடனுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக பொய்யான தகவல்களைக் கூறி காப்பீட்டுக் கட்டணம், ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான செலவு என மொத்தம் ரூ.10 லட்சம் வரையில் வசூலித்துள்ளதும் தெரியவந்தது.

அதேபோல, அவிநாசி கிளையில் 52 குழுக்கள் மூலம் 520 பெண்களிடம் தலா ரூ.1,341 வீதம் ரூ.6,97,320, தனிநபர் கடனுக்காக 355 பேரிடம் தலா ரூ.1,000 வீதம் ரூ.3, 55,000 வசூலித்துள்ளனர். மேலும், 140 பேர் தனிநபர் கடனுக்குத் தேர்வாகியுள்ளதாகக் கூறி ரூ.13 லட்சத்தை வசூலித்துள்ளனர். இந்த நிறுவனம் சார்பில் மொத்தம் ரூ.43 லட்சம் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இது தொடர்பாக திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் உத்தமதானபுரத்தைச் சேர்ந்த ஆர்.கோபி (எ) வினோத் (40), திருச்சி மாவட்டம், கே.கே.நகர் எல்.ஐ.சி. காலனியைச் சேர்ந்த தேவிகா (43), திருச்சி பீமன் நகரைச் சேர்ந்த ஜெ.ஜான்கென்னடி (எ) ஆன்டனி (34) ஆகிய 3 பேரை தனிப் படையினர் கைது செய்தனர். இதில், கோபியும், தேவிகாவும் அக்கா, தம்பி என்பது தெரியவந்தது. மூவரிடமிருந்த ரூ.11 லட்சத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.

கோபி என்பவர் மீது வேதகிரி, வினோத், கோபால் என்ற பல்வேறு பெயர்களில் கள்ளக்குறிச்சி, ஈரோடு, தென்காசி, திருச்சி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் 6 மோசடி வழக்குகளும், தேவிகா (எ) பிரீத்தி மீது திருவள்ளூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் 2 மோசடி வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

இந்த மோசடியில் தொடர்புடைய மற்ற நபர்களைக் கைது செய்யும் பணியில் தனிப் படை போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

# அர்மா மலையில் சித்தன்னவாசல் ஓவியங்களுடன் பழங்கால குகை

திருப்பத்தூர், அக். 16

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆம்பூர் நகருக்கு அருகில் மலையம்பட்டு கிராமத்தில் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள அர்மா மலையில் 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த சமண குகை அமைந்துள்ளது.

இது இந்த மாவட்டத்தின் ஒரே நினைவுச் சின்னமான பழங்கால குகையாகும்.

இது மலையடிவாரத்தில் இருந்து 100 அடி உயரத்தில் 100 கிரானைட் படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது.

மேலும் இந்தக் குகை பல அறைகளாக பிரிக்கப்பட்டு மண் மற்றும் சுடப்படாத செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 3000 சதுர அடியாக உள்ளது.

இந்தக் குகையின் கூரை மற்றும் சுவர்களில் அழ



கிய சுவர் ஓவியங்கள் உள்ளன. இந்த ஓவியங்கள் சமண மற்றும் அஸ்ததிக்பாலர்க ளின் கதைகளை சித்தரிப்ப தாக உள்ளது.

பெரும்பாலான ஓவியங்களில் கிளிகள் மற்றும் பல விதமான பூக்கள் உள்ளன. சி த் தன் ன வா ச ல் குகையை ஒத்து உள்ளது

இது குறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறியதாவது :

குகை ஓவியங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் குகை ஒத்துள்ளது.

இந்தப் குகை கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரூ.20 லட்சம் செலவில் தமிழ்நாடு தொல்லியல் துறை மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அப்போது உடைந்த கிரானைட் படிக்கட்டுகள் சரி செய்யப்பட்டன. நினைவு சின்னங்கள் சேத மடையாமல் இருக்க வேலி அமைக்கப்பட்டது.

இதன் வரலாறு பற்றிய அறிவிப்பு பலகைகளும் நிறுவப்பட்டது. மேலும் இது விரைவில் மாநில அரசால் நினைவு சின்ன மாக அறிவிக்கப்படும் என்றனர்.

இந்நிலையில் கலெக்டர் பாஸ்கர பாண்டியன் அப்பகுதியில் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது :

குகையை பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது வரை சுவர்களில்உள்ள அமைப்பு மற்றும் சுவரொவியங்கள் மாறாமல் உள்ளன.

மலையால் மூடப்பட்டிருக்கும் சரியான பகுதியை ம தி ப் பி டு வ த ற் கா க மலைப்பகுதியின் விரிவான ஆய்வுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த மலைப்பகுதி அடர்ந்த காப்புக்காடுகளுடன் 74.94 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ளது என்றார்.

# போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் குற்றத் தடுப்பு ஆலோசனை கூட்டம்

அன்னதானப்பட்டி, அக். 16

சேலம் மாவட்டத்தில் உள்ள போலீசாருக்கு, குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டம். நெத்திமேட்டில் உள்ள போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நடைபெற்றது. இதற்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன் தலைமை தாங்கி பேசியதாவது:

சேலம் மாவட்டத்தில் ரவுடி பட்டியலில் உள்ள நபர்களை கண்காணித்து வருவாய் கோட்டாட்சியர் முன்பு ஆஜர்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருக்க அவர்களிடம் உறுதி மொழி பத்திரம் எழுதி வாங்க வேண்டும். குறிப்பாக பெண்களுக்கு எதிராக குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களுக்கு, நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து தண்டனையை விரைவாக பெற்றுத் தர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

காணாமல் போன நபர்கள் குறித்த வழக்குகளை விரைந்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டுகள் கண்ணன், செல்வம், துணை சூப்பிரண்டு சங்கீதா, நாகராஜன், ராஜா, மரியமுத்து, ஹரிசங்கரி, அமல்அட்வின், தமிழ்வாணன், சின்னசாமி மற்றும் இன்ஸ்பெக்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 16.10.2023



## வேதிகாவின் புதிய தோற்றம்...

'மதராசி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி தொடர்ந்து முனி, காளை, சக்கரகட்டி, காவியத்தலைவன், பரதேசி, காஞ்சனா 3 உள்பட பல தமிழ், தெலுங்கு படங்களில் வேதிகா நடித்து வருகிறார். மீண்டும் சினிமா மற்றும் வெப் தொடர்களில் நடித்துவரும் வேதிகா அளித்த சிறப்பு பேட்டியில் கூறியதாவது:

தமிழ் சினிமாவில் கதாநாயகிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏராளமான படங்கள் வருவது மகிழ்ச்சியாக உள்ளது. நான் நடித்த பரதேசி, காவியத்தலைவன், சிவலிங்கா போன்ற படங்களில் எனக்கு முதன்மை கதாபாத்திரம் கிடைத்தது. தமிழ் சினிமா இப்போது வித்தியாசமான கதாபாத்திரங்களுடன் உள்ளதால் மாறுபட்ட வேடங்களில் கதாநாயகிகள் நடித்து வருவது மகிழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. சிறு பட்ஜெட், பெரிய பட்ஜெட் படங்கள் என்பது முக்கியமல்ல. கதைதான் பட்ஜெட்டை முடிவு செய்கிறது. பேட்ட ராப் படத்தில் பிரபுதேவா உடன் மகிழ்ச்சியாக நடித்து வருகிறேன். முனி 3 என்ற பேய் படத்தில் நடித்தேன்.

பேய்இருக்கிறதாஇல்லையாஎன்றுஎனக்குதெரியாது. பேய் படம் பிடிக்கும் ஆனால் பேயைக் கண்டு ரொம்ப பயப்படுவேன். நான்விலங்குகளுக்காக குரல் கொடுத்து வருகிறேன். அதனால் அசைவம் சாப்பிடுவதில்லை. பால் கூட குடிப்பதில்லை. காரணம் என்னவென்றால் கன்று குட்டி குடிக்க வேண்டிய பாலை திருடி நாம் குடிப்பது போல் உள்ளது. எனவே பால் குடிப்பதில்லை. தோல் செருப்பு கூட அணிய மாட்டேன். ஓ.டி.டி யில் நல்ல ஆழமான கருத்துள்ள பிடித்தமான கதைகள் வருகின்றன.

## காம்போ பேக்காக ரூ.450க்கு விற்கப்படும் லியோ டிக்கெட்.. அதிர்ச்சியில் ரசிகர்கள்





லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள 'லியோ' திரைப்படம் 19ஆம் தேதி வெளியாகவுள்ளது. திரைப்பிரபலங்கள் பலர் நடித்துள்ள இப்படத்தின் மீதானஎதிர்பார்ப்புரசிகர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. இதைத்தொடர்ந்து 'லியோ' படத்தின் டிக்கெட் முன்பதிவுகள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து திரையரங்குகளில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், கோவையில் உள்ள பிரபல திரையரங்கான கே.ஜி.சினிமாஸ் திரையரங்கில் 'லியோ' படத்தின் பால்கனி டிக்கெட்டுக்காக ரூ.192 வசூலிக்கப்படும் போது அதனுடன் காம்போ பேக்காக ரூ.400 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதற்கு ஜி.எஸ்.டி எல்லாம் சேர்த்து ரூ.450 வரை வசூலிக்கப்படுகிறது.

இந்த காம்போ பேக்கில் டிக்கெட் வாங்குபவர்கள் டிக்கெட் எடுக்கும் போது பாப்கான், குளிர்பானம் போன்றவற்றையும் உடனடியாக சேர்த்து பதிவு செய்து வாங்கி செல்ல வேண்டும் என்று திரையரங்க ஊழியர்கள் கூறுகின்றனர். மேலும், காம்போ பேக் இல்லாமல் வெறும் ரூ.192 கொண்ட பால்கனி டிக்கெட் கொடுக்க ஊழியர்கள் மறுத்து வருகின்றனர். இதனால் ரசிகர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## ஸ்டைலிஷ் வில்லனாக நடித்திருக்கும் விநாயக்.. எந்த படத்தில் தெரியுமா?



விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்திருக்கிறார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018 ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இப்படத்தின் பணிகள் முடிவடைந்து பல ஆண்டுகள் ஆன நிலையில் 'துருவ நட்சத்திரம்' திரைப்படம் நவம்பர் 24 ஆம் ரிலீஸாக உள்ளதாக சமீபத்தில் படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், 'துருவநட்சத்திரம்' திரைப்படத்தில் நடிகர் விநாயக் ஸ்டைலிஸ் வில்லனாக நடித்துள்ளார். அதாவது, நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட இயக்குனர் கவுதம் மேனன், "ஜெயிலர்' படத்தில் நடித்த மலையாள நடிகர் விநாயகத்தை இந்த படத்தில்ஸ்டைலானவில்லனாக பார்க்கலாம். 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா விரைவில் நடைபெறவுள்ளது" என்று தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.



ரஜினி நடித்த 'ஜெயிலர்' திரைப்படத்தில் விநாயக் வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இவர் நடிப்பு ரசிகர்கள் மத்தியில் பாராட்டை பெற்றது.

## விடாமுயற்சி கலை இயக்குனர் மிலன் காலமானார்



வேலாயுதம், வீரம், அண்ணாத்த உள்ளிட்ட பல படங்களில் கலை இயக்குனராக பணியாற்றியவர் மிலன்.

இவர் 'விடாமுயற்சி' திரைப்படத்தில் கலை இயக்குனராக பணியாற்றினார்.

2006ஆம் ஆண்டு வெளியானகலாபக்காதலன் திரைப்படத்தின் மூலம் கலை இயக்குனராக அறிமுகமானவர் மிலன். இவர் வேலாயுதம், வீரம், அண்ணாத்த உள்ளிட்ட பல படங்களில் கலை இயக்குனராக பணியாற்றியுள்ளார். இவர் தற்போது மகிழ்திருமேனி இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவாகி வரும் 'விடாமுயற்சி' திரைப்படத்தில்கலைஇயக்குனராகபணியாற்றிவருகிறார். இப்படத்தின்படப்பிடிப்பு அஜர்பைஜான் நாட்டில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இன்று கலை இயக்குனர் மிலன் அஜர்பைஜான் நாட்டில் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். அதாவது, இன்று அதிகாலை மிலன் நெஞ்சு வலிப்பதாக கூறியுள்ளார். இதைத்தொடர்ந்து அருகில் இருந்தவர்கள் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். ஆனால், பாதிவழியிலேயே மிலன் உயிர் பிரிந்துள்ளது. இவரது மறைவு திரைத்துறையில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## லோகேஷ் கனகராஜ் பாணியில் யூனிவர்ஸை உருவாக்கும் கவுதம் மேனன்



கவுதம் மேனன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'துருவ நட்சத்திரம்'.

இப்படம் நவம்பர் 24ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்திருக்கிறார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இப்படத்தின் பணிகள் முடிவடைந்து பல ஆண்டுகள் ஆன நிலையில் 'துருவ நட்சத்திரம்' திரைப்படம் நவம்பர் 24ஆம் ரிலீஸாக உள்ளதாக சமீபத்தில் படக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், 'துருவநட்சத்திரம்' திரைப்படத்தை யூனிவர்ஸ் போன்று உருவாக்க விருப்பம் உள்ளதாக கவுதம் மேனன் தெரிவித்துள்ளார்.



அதாவது 'துருவ நட்சத்திரம்' படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்தால் லோகேஷ் கனகராஜின் 'எல்.சி.யூ' போல 'துருவ நட்சத்திரம்' படத்தை வைத்து ஒரு யூனிவர்ஸைஉருவாக்கும்ஐடியா இருப்பதாகவும் 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தில் அதன் இரண்டாம் பாகத்திற்கான லீட் உள்ளதாகவும் அவர் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

## நானும் கேப்டனும் போட்ட பிளான்தான் இது.. இங்கிலாந்தை வீழ்த்திய ரகசியமே இதுதான்.. ஆப்கன் வீரர் முஜீப்




இங்கிலாந்து அணியை ஆப்கானிஸ்தான் அணி வீழ்த்திய நிலையில், முஜீப் உர் ரஹ்மான் தான் கேப்டனுடன் போட்ட திட்டம் ஒன்றை பற்றி வெளிப்படையாக கூறி இருக்கிறார். ஆப்கானிஸ்தான் இங்கிலாந்து அணிகள் இடையே ஆனா உலகக்கோப்பை லீக் போட்டி டெல்லியில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வு செய்தது.

டெல்லி ஆடுகளத்தில் சேஸிங் செய்யும் அணியே வெற்றி பெறும் என்பதால் அந்த முடிவை எடுத்த இங்கிலாந்து அணி இந்தப் போட்டியில் தோல்வி அடைந்தது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்தப் போட்டியில் முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி 284 ரன்கள் குவித்தது. பேட்டிங்கில் தங்கள் பணியை சரியாக செய்த ஆப்கானிஸ்தான் அணிக்கு பந்துவீச்சில் பெரும் சவால் காத்திருந்தது. காரணம், டெல்லியில் இரவு நேரத்தில் பனிப் பொழிவு இருக்கும் என்பதால் பந்து வீசும் அணிக்கு பெரும் சவாலாக இருக்கும். முதல் பாதியில் வேலை செய்த ஸ்பின் பந்துவீச்சு, இரண்டாம் பாதியில் வேலை செய்வது கடினம்.

ஆனால், இந்த பிரச்சனையை முறியடிக்க முடிவு செய்த முஜீப் உர் ரஹ்மான், தான் பவர்பிளேவில் பந்து வீசப் போகிறேன் என ஆப்கானிஸ்தான் கேப்டன் ஹஸ்மத்துல்லாவிடம் கூறி இருக்கிறார். ஸ்பின் பந்துவீச்சாளர் பவர்பிளேவில் பந்து வீசுவது பெரிய ரிஸ்க். அந்த ஓவர்களில் பவுண்டரி எல்லை அருகே இரண்டு பீல்டர் மட்டுமே நிற்க முடியும். எனவே, பவர்பிளேவில் ஸ்பின் பந்துகளை பேட்ஸ்மேன் அடித்து ஆட நிறைய வாய்ப்புகள் உள்ளது.

ஆனால், முஜீப் உர் ரஹ்மான் வலைப்பயிற்சியின் போது புதிய பந்தில் எப்படி பந்து வீசுவது என பயிற்சி செய்து தன்னை தயார்படுத்திக் கொண்டார். பின் கேப்டனிடம் தன் திட்டத்தை கூறி இருவரும் இதற்கு ஏற்றவாறு தங்களை மனதளவில் தயார் செய்து கொண்டனர். ஆப்கானிஸ்தான் 284 ரன்கள் எடுத்த நிலையில், இங்கிலாந்து சேஸிங் ஆடத் துவங்கிய போது முதல் ஓவரை முஜீப் உர் ரஹ்மான் வீசினார். அவர் எதிர்பார்த்தது போலவே இங்கிலாந்து அணியால் அவர் பந்துகளை அடித்து ஆட முடியவில்லை. மாறாக முஜீப் உடன் அந்த ஸ்பெல்லில் பந்து வீசிய வேகப் பந்துவீச்சாளர் பரூக்கி ஓவர்களில் அடித்து ஆடியது இங்கிலாந்து.

ஆனாலும், முஜீப் உர் ரஹ்மான் விடாப்பிடியாக ஒரே ஸ்பெல்லில் 7 ஓவர்கள் வரை வீசினார். ஸ்பின் பந்துகளை பெரிதாக ஆட முடியாத அழுத்தத்தில் இருந்த இங்கிலாந்து அணி, முதல் 13 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்தது. பின் முஜீப் உர் ரஹ்மான் ஆட்டத்தின் பிற்பகுதியில் மீதமிருந்த மூன்று ஓவர்களை வீசினார். அவர் 10 ஓவர்கள் வீசி 3 விக்கெட்களை எடுத்தார். ஆட்டநாயகன் விருதை பெற்ற அவர் அப்போது இந்த திட்டத்தை பற்றி கூறினார்.

"ஒரு சுழற்பந்து வீச்சாளராக, பவர்பிளேயில் பந்துவீசுவது மிகவும் கடினம். வட்டத்துக்கு வெளியே இரண்டு பீல்டர்கள் மட்டுமே இருப்பார்கள். அதற்காக நான் வலைப் பயிற்சியில் ஈடுபட்டேன். புதிய பந்தில் பந்துவீசுவது மற்றும் முடிந்தவரை சீரான பந்து வீச்சை தொடர முயற்சிப்பது ஆகியவற்றை செய்தேன். அதுதான் என்னை மிகவும் திறம்பட மாற்றியது. நான் எப்பொழுதும் ஸ்டம்ற்கு ஸ்டம்ப் பந்துவீசி எளிமையாக இருக்கவே முயற்சிப்பேன். ஆட்டத்தின் பிற்பகுதியில் பனி வரப் போகிறது என்பதை அறிந்து, பவர்பிளேயில் என்னை பந்துவீச வைக்குமாறு கேப்டனிடம் சொல்லி இருந்தேன். நாங்கள் மனதளவில் இதற்கு தயாராக இருந்தோம்." என்றார் முஜீப் உர் ரஹ்மான்.

## 2011 உலககோப்பை மாதிரியே நடக்குதே.. மீண்டும் இங்கிலாந்துக்கு அவமானம்..அப்போ இந்தியாவுக்கு வெகுமானமா?




ஐசிசி உலக கோப்பையில் பலம் வாய்ந்த இங்கிலாந்து அணி கத்துக்குட்டி அணியான ஆப்கானிஸ்தானிடம் தோல்வியை தழுவி இருப்பது ரசிகர்களிடையே மகிழ்ச்சி ஏற்படுத்தி இருக்கிறது இந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் நடந்த முக்கியமான அதிர்ச்சி சம்பவம் தற்போது மீண்டும் நடந்திருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள். இந்தியாவில் நடைபெற்ற 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை தோனி தலைமையிலான இந்திய அணி 28 ஆண்டுகளுக்குப் பிறகு கைப்பற்றியது. அந்தத் தொடரில் ஒரு முக்கிய சம்பவம் நடைபெற்றது அப்போது பலம் வாய்ந்த அணியாக கருதப்பட்ட இங்கிலாந்து பலம் குன்றிய அயர்லாந்திடம் தோல்வியை தழுவியது. இந்த தோல்வியை ரசிகர்கள் கனவில் கூட யாரும் எதிர்பார்க்கவில்லை. பெங்களூரில் நடந்த இந்த ஆட்டத்தில் 300 ரன்களுக்கு மேல் இங்கிலாந்து அணி குவித்தும், அதனை அயர்லாந்து அணி யாருமே எதிர்பார்க்காத வகையில் துரத்தியது.தற்போது அதே மாதிரி இங்கிலாந்து அணி ஆப்கானிஸ்தானிடம் தோல்வியை தழுவி இருக்கிறது. மேலும் 2011 ஆம் ஆண்டு உலக கோப்பையில் ஆஸ்திரேலியா அணி தங்களுடைய உலக கோப்பையின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளியை சந்தித்தது. அதேபோல் தற்போது ஆஸ்திரேலிய அணி இம்முறையும் தொடர்ந்து தோல்வியை தழுவி இருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் 2011 ஆம் ஆண்டு உலகக் கோப்பையும் 2023 ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கு ஒரே சான்றுகள் இருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதனால் 2011 ஆம் ஆண்டு தோனி உலக கோப்பையை வென்றது போல், 2023 ஆம் ஆண்டு ரோஹித் சர்மா உலக கோப்யை வென்று ரசிகர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பாரா என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. அதேசமயம் கடந்த டி20 உலக கோப்பை நடைபெற்ற போது கூட இதே மாதிரி தான் ரசிகர்கள் சிலர் 2011 உலகக் கோப்பை போல் அதை ஒப்பிட்டு பேசினார்கள். ஆனால் இந்திய அணி அரை இறுதியில் வெளியே வந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் எது நடந்தாலும் இந்திய அணிக்கு ரசிகர்கள் முழு ஆதரவு கொடுப்பதே தற்போது முக்கியமாகும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.